**சீனா அபிவிருத்தி வங்கி நிதியளிக்கப்பட்ட முன்னுரிமை வீதிச் செயற்திட்டம் III - (கட்டம் I) - 2020**

---

சீனா அபிவிருத்தி வங்கி நிதியளிக்கப்பட்ட முன்னுரிமை வீதிச் செயற்திட்டம் III - (கட்டம் I) இன் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் யாப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், குறிக்கோள்கள் நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

---

கடன் உடன்படிக்கையின் பிரகாரம்இ தற்போதைய போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் முன்னால் உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்று முகவராகவும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராகவும் உள்ளன. நாட்டின் பல்வேறு பக்கங்களிலுமிருந்தும் முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட வீதிப்பிரிவுகளின் புனரமைப்பினூடாக நாட்டின் தேசிய நெடுஞ்சாலை வலையமைப்பின் இயக்கத்தினை விருத்தி செய்து அதனூடக பொருளாதார அபிவிருத்திக்கு வழிவகுத்தல் செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 46,184.54 மில்லியனிற்கு சமமான யூஎஸ்.டொலர் 357.69 மில்லியனாக உள்ளதுடன் அதில் ரூபா 38,736 மில்லியனிற்கு சமமான யூஎஸ்.டொலர் 300 மில்லியன் அபிவிருத்திக்கான சீனா அபிவிருத்தி வங்கியினால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2014 செப்தம்பர் 09 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2017 ஜூன் 17 இல் பூர்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது. இருப்பினும்இ செயற்திட்டத்தின் நடவடிக்கைகளின் பூர்த்தியாக்கல் திகதி 2020 திசெம்பர் 31 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

**1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

---

இந்த அறிக்கையின் 2.1 ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து செம்மையாக்கல்களின் தாக்கத்தை தவிர்த்து, செயற் திட்டத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாரா நிதி நிலைமையியும் நிதிச் செயலாற்றல் மற்றும் அதனது முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் அதனுடன் இனைந்த நிதிக் கூற்றுக்கள் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையானதும் நேர்மையானதுமான நிலைமை ஒன்றை தருகின்றது என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

**1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கருத்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கருத்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|
| வெளிநாட்டு செயற்பாடுகளில் உருவான ரூபா 405 மில்லியன் தொகையான நாணயமாற்று வித்தியாசங்கள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இல.05 இன் பந்தி 36 இன் பிரகாரம் செயற்திட்டத்தின் தேறிய சொத்துக்களின் கீழ் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நாணயமாற்று விகித வித்தியாசங்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இல.05 இன் பிரகாரம் தேறிய சொத்துக்களின் கீழ் பதிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | வெளிநாட்டு செயற்பாடுகளில் உருவான நாணயமாற்று வித்தியாசங்கள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இல.05 இன் பிரகாரம் வெளிப்படுத்தப்படல் வேண்டும். |

## 3. பௌதீக முன்னேற்றம்

### 3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|
| செயற்திட்டத்தின் வேலைத்திட்டத்தின் பிரகாரம் சப்ரகமுவஇ தென்இ மத்திய மற்றும் வடமேற்கு மாகாணங்களிலுள்ள 12 வீதிகளின் 248.49 கி.மீகளினது புனரமைப்பு வேலைகள் செயற்திட்டத்தினால் செய்ய எதிர்பார்க்கப்பட்டிருந்ததுடன் புனரமைப்பு வேலைகளிற்கான ஒப்பந்தங்கள் 03 வெளிநாட்டு ஒப்பந்ததாரர்களிடம் கையளிக்கப்பட்டிருந்தது. மாறல் கட்டளைகளிலிருந்து 248.34 கி.மீகளை உடைய 12 வீதிகள் மற்றும் 72.45 கி.மீகளை உடைய ஏனைய 15 வீதிகள் என்பனவற்றின் புனரமைப்பு வேலைகள் மாத்திரமே 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்திசெய்யப்பட்டிருந்தது. | கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளது. | வீதி வேலைகளின் மிகுதி புனரமைப்புக்களை விரைவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3.2 ஒப்பந்த நிர்வாகம்

| இல | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | குறித்த ஒப்பந்த நிபந்தனைகளின் பிரிவு 10.1 இன் பிரகாரம் வேலைகளின் குறைபாட்டு பட்டியலினது பூர்த்தியாக்களின் நிபந்தனைகள் பெறப்படாமல் 22 கையேற்பு பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | அனைத்து குறைபாட்டு பட்டியல்களும் தற்போது பூர்த்திசெய்யப்பட்டுள்ளன. | ஒப்பந்த நிபந்தனைகளுடன் இணங்கி ஒழுக வேண்டும். |
| (ஆ) | செயலாற்றல் பாதுகாப்பு பத்திரத்தினை வழங்குவதற்கான கிரயத்தினை மேற்கொள்வதற்கு ஒப்பந்ததாரர்களினை அனுமதிப்பதனூடாக வீதி புனரமைப்பு வேலைகள் மீது ஓர் வேறான கொடுப்பனவு உருப்படிகள் அளவைப்பட்டியல்களில் செய்யப்பட்டிருந்தமை ஒப்பந்தப்பொது நிபந்தனையின் உபபிரிவு 4.2 இன் கீழ் செய்யப்பட்ட ஏற்பாடுகளிற்கு முரணாக காணப்பட்டது. அதன்படி கூட்டுமொத்தம் ரூபா 96.4 மில்லியன் ஒப்பந்ததாரர்களினால் பெறப்பட்ட செயறலாற்றல் பாதுகாப்பு பத்திரத்தின் கிரயத்தினை மீளப்பெற சீ1இ சீ8இ சீ4இ சீ9 மற்றும் சீ10 ஒப்பந்தப்பொதிகளுடன் தொடர்புபட்ட ஒப்பந்ததாரர்களிற்கு மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | இல்லாவிடின் ஒப்பந்ததாரர்கள் செயலாற்றல் பாதுகாப்புபத்திரத்தின் கிரயத்தினை ஏனைய கொடுப்பனவு உருப்படிகளில் சேர்ப்பர் அதன் பெறுபேறாக வேலை வழங்குனர் இறுதியில் அக் கிரயம் ஏற்படும் போது விகிதங்கள் அதிகரிப்பார். | அளவைப்பட்டியல்களின் மீளாய்வு விலைமனு ஆவணங்களை வழங்க முன்னர் பெறுகை நிபுனர்கள் மற்றும் தொழிநுட்ப மதிப்பீட்டு குழு என்பவற்றினால் செய்யப்படல் வேண்டும். |
| (இ) | ஒப்பந்த பொது நிபந்தனைகளின் உபபிரிவு 14.9 இற்கு முரணாக ரூபா 46.4 மில்லியன் வங்கி உத்தரவாதத்தின் கீழான குறைபாட்டு நிபர்த்தி காலப்பகுதி காலாவதியாவதற்கு முன்னர் 4 நிர்மான வேலைகளுடன் தொடர்புபட்ட பிடிகாசாக செலுத்தப்பட்டிருந்தன. | 4 செயற்திட்டங்களினதும் குறைபாட்டு பொறுப்பு காலப்பகுதி 2021 இல் காலாவதியாகி இருக்க வேண்டும். ஆனால் குறைபாட்டு பொறுப்பு காலப்பகுதியின் இறுதியில் விடுவிக்கப்பட வேண்டிய இரண்டாவது பகுதி பிடிகாசினை தக்கவைத்துக்கொள்ள எவ்வித கணக்கும் காணப்பட்டிருக்கவில்லை. எனவே வங்கி உத்தரவாத பத்திரத்துடன் பிடிகாசினை விடுவிக்க திறைசேறியினால் வழியுறுத்தப்பட்ட திகதியில் கடனை முடிவுறுத்த அது மாத்திரமே ஓர் வழியாக இருந்தது. | ஒப்பந்த நிபந்தனைகளுடன் இணங்கி ஒழுக வேண்டும். |